இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 25-09-2024

# ஒரே தேர்தல் - ஒரே நாசம்

ஒரே நாடு - ஒரே தேர்தல் திட்டம் தொடர்பாக உயர்நிலைக் குழு கொடுத்த அறிக்கையை ஒன்றிய அமைச்சரவை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கிறது. இவர்கள் சொன்னதை உயர்நிலைக் குழு சொல்கிறது. உயர்நிலைக் குழு எழுதிக் கொடுத்ததை அமைச்சரவை ஏற்கிறது. இவை அனைத்தும் பா.ஜ.க.வுக்கு பழகிப் போன நாடகங்கள்!

வாக்களித்த மக்களுக்கு உருப்படியாய் எதையும் செய்யத் தெரியாத ஆட்சியாக மூன்றாவது முறையும் தொடர்ந்து கொண்டிருக்கிறது பிரதமர் மோடி தலைமையிலான பா.ஜ.க. ஆட்சி.

*** திடீரென்று ஒருநாள் நள்ளிரவில் 500, 1000 ரூபாய் நோட்டுகளைத் தடை செய்தார்கள். புதிய இந்தியா பிறந்திருப்பதாக அறிவித்தார்கள்.**

*** பாபர் மசூதி இருந்த இடத்தில் கோவில் கட்டினார்கள். பூஜையை பிரதமர் மோடியே செய்தார்.**

*** காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி அளிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவை நீக்கினார்கள்.**

- அவ்வளவுதான். இவை மூன்றும்தான் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்திருக்கும் பா.ஜ.க.வின் சாதனையாகும். அழிவை பட்டியலிட்டால், பல பக்கங்கள் வரும். நிறைவேற்றாத வாக்குறுதிகளை பக்கம் பக்கமாக பட்டியலிடலாம். இதைப் பற்றி எல்லாம் பா.ஜ.க.வுக்கு கவலை இல்லை.

பொதுசிவில் சட்டம் - ஒரே நாடு ஒரே தேர்தல் ... இப்படி எதேச்சதிகாரச் சட்டங்களை நிறைவேற்றி தங்களது எண்ணங்களைச் செயல்படுத்துவதில்தான் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியானது குறியாக இருக்கிறது. இதனை அவ்வப்போது பொதுவெளியில் சொல்லிக் கொண்டு, ஏதோ அரசாங்கம் செயல்படுவதைப் போலக் காட்டிக் கொள்கிறார்கள்.

நாடு முழுவதும் ஒரே நேரத்தில் நாடாளுமன்றத்துக்கும் மாநில சட்டமன்றங்களுக்கும் தேர்தல் நடத்த வேண்டும் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் தலைமையில் உயர்நிலைக் குழுவை அமைத்தது பா.ஜ.க. அரசு. நாடாளுமன்றத்துக்கும் - சட்டமன்றத்துக்கும் தேர்தலை ஒரே நேரத்தில் நடத்தலாம் என்றும், இந்தத் தேர்தல் முடிந்த 100 நாட்களுக்குள் உள்ளாட்சித் தேர்தலை நடத்தலாம் என்றும் இக்குழு பரிந்துரைத்துள்ளது. தொடர்ந்து தேர்தலை நடத்துவதால், நிறைய பணம் செலவு ஆகிறது என்று காரணம் சொல்கிறார்கள்.

இவர்களால் நாடாளுமன்றத் தேர்தலை மட்டும் கூட ஒரே கட்டமாக - ஒரே நாளில் நடத்திக் காட்ட முடியுமா? நடத்திக் காட்டி இருக்கிறார்களா என்றால் இல்லை. அதுவே அவர்களால் முடியாது.

சில மாதங்களுக்கு முன்னால் நாம் நாடாளுமன்றத் தேர்தலைச் சந்தித்தோம். அந்தத் தேர்தலையாவது ஒரே கட்டமாக அவர்களால் நடத்த முடிந்ததா? இல்லை. 543 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான நாடாளுமன்றத் தேர்தல் இந்தியா முழுவதும் 7 கட்டங்களாகத் தான் நடத்தப்பட்டது.

*** 102 தொகுதிகள் - முதல் கட்டம்**

*** 89 தொகுதிகள் - இரண்டாம் கட்டம்**

*** 94 தொகுதிகள் - மூன்றாம் கட்டம்**

*** 96 தொகுதிகள் - நான்காம் கட்டம்**

*** 49 தொகுதிகள் - ஐந்தாம் கட்டம்**

*** 57 தொகுதிகள் - ஆறாம் கட்டம்**

*** 57 தொகுதிகள் - ஏழாம் கட்டம்** - என்று தான் தேர்தலை நடத்தினார்கள். ஏப்ரல் 19, ஏப்ரல் 26, மே 7, மே 13, மே 20, மே 25, ஜூன் 1 - ஆகிய நாட்களில் தேர்தல் நடந்தது. அதாவது 40 நாட்கள் தேர்தலை நடத்திய இவர்கள் தான் ஒரே நாளில் நாடாளுமன்றத்துக்கு மட்டுமல்ல, இந்தியாவில் உள்ள அனைத்து சட்டமன்றங்களுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்தப் போகிறார்களாம்.

இந்தியாவில் மொத்தம் 28 மாநிலங்கள் உள்ளன. 8 யூனியன் பிரதேசங்கள் இருக்கின்றன. இவற்றில் மொத்தம் 4 ஆயிரத்து 123 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. இவை அனைத்துக்கும் சேர்த்து தேர்தல் நடத்தப் போகிறார்களாம்.

"நாட்டின் துடிப்பான ஜனநாயகத்தை நோக்கிய பாதையில் முக்கியப் படி" - என்று இந்த முடிவை வரவேற்றுக் கருத்துச் சொல்லி இருக்கிறார் பிரதமர் மோடி. எது துடிப்பான ஜனநாயகம்? ஆட்சியை ஜனநாயக முறைப்படி நடத்துவதுதான் ஜனநாயகத்தின் முக்கியப் படியாகும். நாடாளுமன்றத்துக்கே வராமல், நாடாளுமன்றத்தில் முக்கியமான எந்த விவாதத்துக்கும் பதில் அளிக்காமல் இருப்பவர் ஜனநாயகத்தைப் பற்றி பேசுவது கேலிக்குரியது ஆகும்.

**இந்தியா விவசாய நாடாகச் சொல்லப்படுகிறது. விவசாயிகளுக்கு விரோதமான மூன்று வேளாண் சட்டங்களை எந்த விவாதமும் இல்லாமல் நிறைவேற்றினார்கள். ஒன்றரை ஆண்டு காலம் பல்வேறு மாநில விவசாயிகள் தலைநகர் டெல்லியில் தங்கி போராடினார்கள். அதன்பிறகு வேண்டா வெறுப்பாக அந்தச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டது. சட்டத்தை திரும்பப் பெறும் போதும் எந்த விவாதமும் இல்லை. சட்டத்தை திரும்பப் பெற்ற பிறகும் அது சரியான சட்டம்தான் என்று பொதுவெளியில் பேசினார் பிரதமர். இதுதான் அவர் ஜனநாயகத்துக்கும், நாடாளுமன்றத்துக்கும், சட்டத்துக்கும், மக்களுக்கும் தரும் மரியாதை ஆகும். இவரெல்லாம் துடிப்பான ஜனநாயகம் பற்றிப் பேசுவதுதான் கடுப்பானதாக இருக்கிறது.**

**ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது காரிய சாத்தியம் இல்லாதது. இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு விரோதமானது. மாநிலங்களின் சுயாட்சிக்கு விரோதமானது. கூட்டாட்சித் தன்மைக்கு விரோதமானது. இவை அனைத்தையும் விட குழப்பமானது. இந்திய ஜனநாயக அமைப்பு முறையில் குழப்பம் ஏற்படுத்துவதற்காகவே இது கொண்டு வரப்படுகிறது.**

••



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.9.2024) சென்னை, காமராஜர் அரங்கில், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் மறைந்த தோழர் சீத்தாராம் யெச்சூரி அயர்களின் படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, சீத்தாராம் யெச்சூரி அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே.என்.நேரு, க.பொன்முடி, செஞ்சி கே.எஸ்.மஸ்தான், திராவிடர் கழகத் தலைலர் கி.வீரமணி, மக்களவை கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு எம்.பி., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமைக்குழுவின் அசோக் தாவ்லே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் கே.பாலகிருஷ்ணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கு.செல்வப்பெருந்தகை, ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ எம்.பி., இந்து குழுமத்தின் இயக்குநர் என். ராம், வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் எம்.பி., இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா. முத்தரசன், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் டி.கே.ரங்கராஜன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் மாநில செயலாளர் ஜி.இராமகிருஷ்ணன், இந்திய யூனியன் முஸ்லீக் லீக் தேசிய தலைவர் காதர் மொய்தீன், மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் லிபரேசன் கட்சியின் மாநில செயலாளர் பழ. ஆசைத்தம்பி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர் திருமதி உ. வாசுகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# சமதர்ம இந்தியாவை உருவாக்க யெச்சூரி வழியில் பயணிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

"சமூகநீதிக்காகவும், பெண்களுடைய சம உரிமைக்காகவும் போராடியவர் கலைஞர் என்று குறிப்பிட்டார். தமிழ்நாடு இல்லாமல் இந்தியா இல்லை; கலைஞர் இல்லாமல் தமிழ்நாடு இல்லை! என்று பேசினார். அதைத் தொடர்ந்து பேசும்போது அவரின் தமிழ் மட்டும் பிரபலம் அல்ல; அவரின் நகைச்சுவை உணர்வும் ரசிக்கத்தக்கது. "மாக்சிம் கார்க்கியின் தாய் காவியத்தின் மூலம் மக்களுக்கு தொடர்ந்து முற்போக்குச் சிந்தனைகளை விதைத்தவர் கலைஞர்" என்று அந்த புகழஞ்சலிக் கூட்டத்தில் நம்முடைய சீதாராம் யெச்சூரி அவர்கள் உணர்வுபூர்வமாக பேசியதை என்னால் இப்போதும் நிச்சயமாக என்னால் மறக்க முடியாது.

அந்தளவுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் மீது அன்பு கொண்டவர்; பாசம் கொண்டவர்.

என் மீது கூட அளவு கடந்த பாசத்தை வைத்திருந்தார். கூட்டணிப்பற்றி பேசிக் கொண்டிருந்தபோது தமிழ்நாட்டில் இருக்கக் கூடிய தலைவர்கள் முரண்பிடித்தாலும் அவர்தான் சரி செய்து சிரித்த முகத்துடன் முடித்துக் கொடுப்பார். அது எல்லாம் பசுமையாக நினைவிற்கு வருகிறது. அவருடைய புன்சிரிப்பையும் நம்மால் என்றைக்கும் மறக்க முடியாது. எந்தப் பிரச்னையாக இருந்தாலும் சிரித்த முகத்தோடுதான் பேசுவார். எந்தக் கருத்தையும் சொல்வதாக இருந்தாலும் அதையும் சிரித்த முகத்தோடு தான் சொல்வார்.

இந்தியாவின் எத்தனையோ பல பிரபலமான அரசியல் தலைவர்களை ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் உருவாக்கியிருக்கிறது. அப்படி உருவாக்கி இருக்கக் கூடிய தலைவர்களுள் முக்கியமான தலைவர்தான் நம்முடைய யெச்சூரி அவர்கள். ஜே.என்.யு. முழுவதையும் இடதுசாரி கோட்டையாக மாற்றிய பெருமை யெச்சூரிக்குதான் உண்டு. அதனால் தான் அவரின் உடல் ஜே.என்.யு. வில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது.

இது அவரின் அறிவாற்றலுக்கு எடுத்துக்காட்டாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதன் மூலமாக தோழர் யெச்சூரி அவர்கள் எப்போதும் இளைய சமுதாயத்துக்கான வழிகாட்டியாக வாழ்ந்திருக்கிறார் என்பதையும் என்பதை நம்மால் தெளிவாக உணர முடிகிறது.

இடதுசாரி கருத்தியலை இறுதி மூச்சு வரை கடைப்பிடித்த ஜனநாயகவாதியாக வாழ்ந்தார். தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள். தேவகவுடா, குஜ்ரால் ஆகியோர் பிரதமர்களாக பதவி வகித்த காலத்தில் இடதுசாரிகளின் பங்களிப்புக்குப் பின்னணியில் இருந்து பெரும் பங்காற்றியவர்.

1996-க்கு பிறகு ஒன்றியத்தில் கூட்டணி அரசுகள் உருவான காலத்தில், கூட்டணி அரசுகளை அமைப்பதில் இடதுசாரிகள் மிக மிக முக்கியப் பங்கு வகித்தார்கள். ஜனதா தளத்தின் தேவகவுடா பிரதமரானபோதும் - அதன்பிறகு ஐ.கே.குஜ்ரால் பிரதமரானபோதும் தி.மு.க. பங்கேற்ற ஐக்கிய முன்னணிக்கு இடதுசாரிகள் ஆதரவு அளித்தார்கள். அப்போது ஹர்கிஷன்சிங் சுர்ஜித்தின் 'படைத் தளபதியாக' செயல்பட்டவர்தான் நம்முடைய தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள். அன்றைக்கு கூட்டணிக் கட்சித் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளில் சீதாராம் யெச்சூரியும் கலந்து கொண்டு தன்னுடைய ஆழமான கருத்துக்களை எல்லாம் பதிவு செய்திருக்கிறார். ஐக்கிய முன்னணி ஆட்சியின் போது, குறைந்தபட்ச செயல் திட்டத்தை உருவாக்கியதில் முக்கியமான காரணகர்த்தாவாக விளங்கியவர் நம்முடைய யெச்சூரி அவர்கள்.

**இந்தியா கூட்டணி உருவாக காரணமானவர்களில் ஒருவர் யெச்சூரி!**

இப்போது நாம் உருவாக்கியிருக்கும் இந்தியா கூட்டணி தோழர் பாலகிருஷ்ணன் குறிப்பிட்டு சொன்னார், பெருமையோடு சொன்னார். இக்கூட்டணி உருவாகியிருக்கிறது என்றால், அதற்கு முக்கிய காரணகர்த்தாக்களில் ஒருவராக விளங்கியவர் நம்முடைய தோழர் யெச்சூரி அவர்கள். சில கட்சிகளோடு முரண்பாடு இருக்கலாம். ஆனால், முரண்பாடுகள் இருந்தாலும் அதையும் தாண்டி அகில இந்திய அளவில் பா.ஜ.க.வை வீழ்த்த எல்லோரும் கைகோத்தாக வேண்டும் என்ற உறுதியோடு இருந்து அந்த பணியை வெற்றிகரமாக நடத்தி காட்டினார். இந்தியா கூட்டணி இந்தளவுக்கு வெற்றி பெற முக்கியமானகாரணகர்த்தாவாக இருந்தார் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள்.

**தோழர் சீத்தாராம் யெச்சூரி விட்டுச் சென்ற பணிகளை தொய்வின்றி தொடர்வோம்!**

தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் சிறந்த எழுத்தாளராகவும் விளங்கியிருக்கிறார். கட்சியின் வார இதழான பீப்பிள்ஸ் டெமாக்ரசியின் ஆசிரியராக பணியாற்றியிருக்கிறார். இந்துத்துவா மீதான அவரின் விமர்சனங்கள் புத்தகங்களில் வெளிப்பட்டிருக்கிறது. தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட 'மோடி அரசாங்கம் - வகுப்புவாதத்தின் புதிய அலை' என்ற நூல் முக்கியமான புத்தகம்!

பிரதமர் மோடி ஆட்சி அதிகாரத்தை பயன்படுத்தி கட்டவிழ்த்துவிட்ட வகுப்புவாதத்தை அந்த நூலில் தோழர் யெச்சூரி அவர்கள் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்.

நாள்தோறும் தீக்கதிர் பத்திரிகை வருகிறது. அந்த தீக்கதிர் பத்திரிகையில் டைரி போல் குறிப்புகளை தொடர்ந்து எழுதி வந்தார். காரணம் தமிழ்நாட்டில் இருப்பவர்களுக்கு அந்த அரசியல் தெரிந்துகொள்வதற்காகவும், புரிந்துகொள்வதற்காகவும் அதையும் அவர் தொடர்ந்து செய்து காட்டினார்.

தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள் விட்டுச்சென்றுள்ள பணிகளை எல்லாம் நாம் எல்லோரும் தொடர்ந்து தொய்வில்லாமல் தொடர வேண்டும்.

இந்தியாவில் கம்யூனிஸ்ட் இயக்கம் தொடங்கி 100 ஆண்டுகள் கடந்திருக்கும் நிலையில், அதன் ஆளுமைகளாக வலம் வந்த தலைவர்களின் வரிசையில், தனக்கென தனி இடம் பெற்று புகழ்மிக்க தலைவராக வாழ்ந்து காட்டியிருக்கிறார் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள்.

கல்வியையும், அதன் மூலம் பயின்ற அரசியலையும் சமூக மாற்றத்துக்காக பயன்படுத்தியவர் தோழர் சீதாராம் யெச்சூரி அவர்கள். மதச்சார்பற்ற இந்தியாவை உருவாக்க வேண்டும், சகோதரத்துவ இந்தியாவை உருவாக்க வேண்டும், சமூகநீதி இந்தியாவை உருவாக்க வேண்டும். இதை எல்லாவற்றையும் உள்ளடக்கிய சமதர்ம இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் அவர் வழியிலே நின்று பணியாற்றிட வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு, அவருடைய மறைவுக்கு என்னுடைய வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



திருவெண்ணெய்நல்லூர் சின்னசெவலை பகுதியில் அமைக்கப்பட்டு வரும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுமானப் பணிகளை உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி, மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்ட பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில ஆதி திராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், தயா.இளந்திரையன், ஒன்றியச் செயலாளர் பி.வி.ஆர்.சு.விசுவநாதன், ஜி.இரவிச்சந்திரன், ஒன்றியக் குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல், பொதுக்குழு பக்தவத்சலம், மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் இராஜிவ்காந்தி, ஒன்றிய நிர்வாகிகள் சடகோபன், கிருஷ்ணமூர்த்தி, காசி விசுவநாதன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சுவை.சுரேஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, கிருஷ்ணா ராஜ், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் தேவா, பொறியாளர் அணி ஆனந்த், மாவட்ட சுற்றுச்சூழல் அணி சந்திரசேகர், இளைஞர் அணி நிர்மல் ராஜ், ராஜசேகர், கிளைச் செயலாளர்கள் கருணாகரன், ரங்கநாதன், கோதண்டபாணி, விசுவநாதன், பன்னீர், பழனி, காத்தமுத்து, சரவணன், ஆறுமுகம், ராமலிங்கம், இலட்சுமணன், சிவா, செந்தில் ஊராட்சி மன்றத் தலைவர்கள் கௌரி சின்னராசு, மணிகண்டன், சிபாராணி ஏழுமலை, விஜயன், தேவி செந்தில் ஒன்றியக் குழு உறுப்பினர் சரவணன், சுபாஷ் நகர மன்ற துணை தலைவர் குணா, வெங்கடேசன், கார்த்திகேயன், ஏழுமலை மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.